2014 பிப்ரவரி 1]

முதல்வர் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

வீட்டு வசதி

***32465—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, அமராவதி நகர் மற்றும் திருமூர்த்தி நகர் பகுதிகளிலுள்ள மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மீனவர்களுக்கு மீன் வளத் துறையின்மூலம் வீடு கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், நாளைய பாரதப் பிரதமர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள அமராவதி நகர் மற்றும் திருமூர்த்தி நகர் பகுதிகளிலுள்ள மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டேன். கட்டித் தருவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லையென்று கூறினார்கள். அங்கே அதிக மக்கள் இல்லை. திருமூர்த்தி நகர் பகுதியிலே 8 குடும்பங்கள்*

தான் இருக்கின்றன. அமராவதி நகர் பகுதியிலே 20 குடும்பங்கள் தான் இருக்கின்றன. மலைவாழ் மக்களும் இருக்கிறார்கள். ஆகவே, அரசுமூலமாக கட்டடத்தைக் கட்டி வாடகைக்கு விடுவதற்கு மீன் வளத் துறைக்குச் சொந்தமான இடம் உள்ளது. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலிப்பார்களா எனத் தங்கள்மூலமாகக் கேட்டு, அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளம் தொகுதி, அமராவதி நகரிலே pe6 என்கிற அமராவதி வனச் சரகம் உள்ளது. மலைவாழ் மக்கள் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். அமராவதி நகர் மற்றும் திருமூர்த்தி நகர் பகுதிகளிலே வாழும் மீனவக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் பட்டாவுடன் விண்ணபித்தால், அவர்களது விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திட்டமான பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின்மூலம் வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்மூலமாக வீடுகள் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று கூறினார்கள். அந்தப் பகுதிகளிலே உள்ள மீனவர்களுக்கு பல்வேறு வசதிகள் அரசின்மூலமாக ஏற்கெனவே ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட, வலைகளில் ஏற்படும் சிக்கலைப் பிரிப்பதற்கு இடமில்லை. அங்கு மீன்களை விற்பனை செய்வதற்கு இடவசதி இல்லை. 1965 ஆம் ஆண்டிலேயே மீன் தொட்டி மற்றும் மீன் வளர்ப்புக் கூடங்கள் ஆகியவை தேவையான அளவு கட்டப்பட்டிருந்தாலும்கூட, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் இந்த இரண்டு அணைப் பகுதிகளிலும் சுமார் 60 இலட்சம் ரூபாய்க்கு மராமத்துப் பணிகள்

மேற்கொள்ளப்பட்டு தொட்டிகள் சீரமைக்கப்பட்டன. அந்த மக்களுக்கு வீட்டோடு சேர்த்து மீதமுள்ள தொட்டிகளையும் சீரமைத்து, மீன் குஞ்சுகளை விடுவதற்குத் தேவையான வசதிகளையும் செய்துதர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலமாகக் கேட்டு அமருகிறேன்.

முற்பகல் 11—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாம் முறையாக தமிழகத்தின் முதல்வராக இருந்தபோது, சுனாமி பேரிடர் காலத்திலே, சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்து வீடுகளுக்கும் வீடு கட்டிக்கொடுத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருமூர்த்தி நகரிலும், அமராவதி நகரிலும் 20 மீனவ குடும்பங்கள்தான் இருக்கின்றன என்று குறிப்பிட்டார். அவர்கள் பட்டாவுடன் சேர்த்து விண்ணப்பித்தால், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் மூலமாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும். அத்துடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலை பழுதுபார்க்கும் கூடம் ஒன்று கட்டித்தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதை ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

29—

தார்ச் சாலை

***17420—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—